செய்தி வெளியீடு எண்: 302    நாள்: 10.6.2009

செய்தி வெளியீடு

## அரசு திரைப்படக் கல்லூரிக்கு 50 ஆம் ஆண்டு துவக்க விழா
## கருத்தரங்கம்
## மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் பங்கேற்பு

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், திரைப்படத்தயாரிப்பு, தொழில்நுட்ப கல்வி, இயக்கம் மற்றும் கலை உணர்வுகளை பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், படத் தொகுப்பு, படம் பதனிடுதல் போன்ற பட்டயப்படிப்புகளை பயிற்றுவித்து வருகின்றது.

இந்நிறுவனத்தில் 50ஆம் ஆண்டு துவக்க விழா 11.6.2009 அன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் " தரமான திரைப்படங்களை நோக்கி" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நிகழவுள்ளது. இக்கருத்தரங்கில் திரைப்படத் தயாரிப்பாளரும் சென்னை மாநகர திரையரங்கு உரிமையாளர் சங்கத் தலைவருமான திரு அபிராமி இராமநாதன், பெப்சி தலைவர் திரு வி.சி. குகநாதன் மேலும் திரைப்பட இயக்குநர்கள் திரு ராதாமோகன், சசிகுமார், திருமதி ப்ரியா மற்றும் திரைப்பட வல்லுநர் திரு அருள்மூர்த்தி ஆகியோர் பங்கு பெறுகின்றனர்.

அன்று மாலை 5.00 மணியளவில் திரைப்படக் கல்லூரி டி.டி.எஸ். திரையரங்கில் ஆண்டுவிழா சிறப்புடன் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு க. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்கவும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சி. காமராஜ், இ.ஆ.ப., அவர்கள், திரைப்படத்தயாரிப்பாளர் திரு ஏவிஎம். சரவணன், திரைப்பட நடிகை செல்வி சிநேகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பங்கேற்கும் இந்த இனிய விழாவில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள் சிறந்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரை நிகழ்த்த உள்ளார்கள். இவ்விழாவில் திரையுலக பிரமுகர்கள், அரசு உயர் அலுவலர்கள், திரைப்படக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

10/6/09
JD(PR)

இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9